RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

காலை நாளிதழ்

தினகனி

செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:

94436 99066

namadhudhinakani@gmail.com

www.dhinakani.com

N.S.K தங்கமாளிகை

தங்கம் மற்றும் வெள்ளி பொருட்களுக்கு


செய்கூலி, சேதாரம் இல்லை

96557 79285

98429 78833

Vol: 02 | Issue: 41 | 4 Pages | 10.9.2024 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 02 | இதழ்: 41 | 4 பக்கங்கள் | 10.9.2024 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**தவமுந் தவமுடையார்க் காகும் அவமதனை**
**அஃதிலார் மேற்கொள் வது**

**விளக்கம்:**

தவக்கோலமும் தவஒழுக்கமும் உடையவர்க்கே பொருந்துவதாகும்; அக் கோலத்தை தவஒழுக்கம் இல்லாதவர் மேற்கொள்வது வீண்முயற்சியாகும்.

## எரிபொருள் ஏற்றிச்சென்ற லாரி மீது மற்றொரு லாரி மோதி கோர விபத்து 48 பேர் பலி



அபுஜா, செப். 10

மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள நாடு நைஜீரியா. அந்நாட்டின் நைஜர் மாகாணம் அகெயி நகரில் உள்ள நெடுஞ்சாலையில் நேற்றுஎரிபொருள் ஏற்றிக்கொண்டு லாரி சென்றுகொண்டிருந்தது.

அப்போது, சாலையின் எதிரே வேகமாக வந்த மற்றொரு லாரி எரிபொருள் ஏற்றிச்சென்ற லாரி மீது மோதி விபத்துக்குள்ளானது.

இந்த கோரவிபத்தில் 2 லாரிகளும் வெடித்து சிதறின. இச்சம்பவத்தில் 48 பேர் உயிரிழந்தனர். மேலும், 50க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்த விபத்து குறித்து தகவலறிந்த தீயணைப்பு, மீட்புக்குழுவினர், போலீசார் சம்பவ இடத்திற்கு படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமத்தனர். மேலும், இந்த விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## இம்ரான்கானை விடுதலை செய்யக்கோரி பாகிஸ்தானில் பேரணி



லாகூர், செப். 10

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான். பாகிஸ்தான் தெக்ரிக் இஇன்சப் கட்சி தலைவரான இவர், 2018 முதல் 2022 வரை பிரதமராக இருந்தார். பின்னர், எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தால் பிரதமர் பதவியை இழந்த இம்ரான்கான் மீது ஊழல் முதல் பயங்கரவாதம் வரை பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

குறிப்பாக, பிரதமராக இருந்த காலத்தில் வெளிநாட்டு தலைவர்கள் மற்றும் பிரமுகர்களிடமிருந்து பெற்ற பரிசுகளை அரசிடம் ஒப்படைக்காமல் விற்று சொத்து சேர்த்து ஊழலில் ஈடுபட்டதாக இம்ரான்கான் மற்றும் அவரது மனைவி புஷ்ரா பிபி மீது குற்றச்சாட்டு எழுந்தது. பரிசுப்பொருட்களை அரசு கருவூலமான தோஷகானா என்ற துறையில் ஒப்படைக்காமல் ஊழலில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது.

அதேபோல், அரசின் ரகசியங்களை கசியவிட்டதாகவும், பிரதமர் பதவியில் இருந்து நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து வன்முறையை தூண்டியதாகவும் இம்ரான்கான் மீது பல்வேறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. மேலும், தேர்தல் ஆணையத்திற்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டதாகவும் இம்ரான்கான் மீது பல்வேறு பிரிவுகளில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

இந்த வழக்குகளில் இம்ரான்கான் மற்றும் அவரது மனைவி புஷ்ரா பீபி கைது செய்யப்பட்டு ராவல்பிண்டியில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இம்ரான்கானை விடுதலை செய்யக்கோரி அவரது கட்சி ஆதரவாளர்கள் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், சிறையில் உள்ள இம்ரான்கானை விடுதலை செய்யக்கோரி பாகிஸ்தான் தெக்ரிக்இஇன்சப் கட்சியினர் இன்று பேரணி நடத்தினர். தலைநகர் இஸ்லாமாபாத்தின்சங்ஜனி மாட்டுச்சந்தை பகுதியில் இந்த பேரணி நடைபெற்றது. இப்பேரணியில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

## வியட்நாமை புரட்டி போட்ட யாகி புயல்: பலி எண்ணிக்கை 21 ஆக உயர்வு



ஹனோய், செப். 10

பிலிப்பைன்சில் உருவான யாகி புயலால் கடந்த வாரம் அங்கு கனமழை பெய்தது. இதனை தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவில் சிக்கி அங்கு 14 பேர் பலியாகினர். சீனாவை தாக்கிய யாகி சூறாவளி புயல் நேற்று வியட்நாமை தாக்கியது. வியட்நாமின் வடக்கு கடலோர பகுதி மாகாணங்களான குவாங் நின், ஹைபாங் ஆகிய பகுதிகளில் மணிக்கு 149 கி.மீ. வேகத்துடன் புயல் கரை கடந்தது. இதனால் பலத்த காற்றுடன் பல மணி நேரம் கனமழை கொட்டியது.

புயல் காரணமாக கடலோர பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டன. பலத்த காற்று வீசியதால் மரங்கள் வேருடன் சாய்ந்தன. ஏராளமான மின்கம்பங்கள் சாய்ந்ததால் சுமார் 30 லட்சம் மக்கள் மின்சாரம் இன்றி தவிக்கின்றனர். கனமழையால் சில இடங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டது. யாகி புயல் வியட்நாமையை புரட்டி போட்டுள்ளது.

புயல் காரணமாக 4 விமான நிலையங்கள் மூடப்பட்டன. நூற்றுக்கணக்கான விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. இந்நிலையில், யாகி புயல் மற்றும் மழை தொடர்பான விபத்துகளில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 21 ஆக உயர்ந்துள்ளது. 229 பேர் காயம் அடைந்துள்ளனர். வேருடன் சாய்ந்த மரங்கள், இடிந்து விழுந்த மின்கம்பங்கள் மற்றும் வீடுகளின் கூரைகளை அப்புறப்படுத்தும் பணிகள் முழுவீச்சில் நடைபெறுகின்றன. மீட்புப் பணிகளில் ராணுவம், போலீசார் மற்றும் மாநகராட்சி பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

# தொழில் முதலீடுகளை ஈர்க்க அமெரிக்கா சென்றுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலினை தமிழ்சங்க நிர்வாகிகள் நேரில் சந்தித்து வாழ்த்து



சென்னை, செப். 10

தொழில் முதலீடுகளை ஈர்க்க அமெரிக்கா சென்றுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலினை அங்குள்ள பல்வேறு தமிழ்சங்க நிர்வாகிகள் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர். அவர்களிடம், ஆண்டுக்கு ஒருமுறையாவது தமிழ்நாட்டுக்கு குடும்பத்துடன் வாருங்கள் என்று முதல்வர் கேட்டுக் கொண்டார். தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின்தலைமையிலான அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த மூன்று ஆண்டுகளில், அதிக முதலீடுகளை ஈர்க்கும் உயர் தொழில்நுட்பம் வாய்ந்த தொழில்களையும், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கும் தொழில்களையும் ஈர்த்துள்ளதோடு, 2030ம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக தமிழ்நாட்டை மாற்ற வேண்டும் என்ற இலக்கை அடைவதற்காக பல்வேறு நடவடிக்கைகளையும் முனைப்போடு எடுத்து வருகிறது.

அந்த வகையில், வளர்ச்சியின் அடையாளமாக திகழும் தொழில் நிறுவனங்களை தமிழ்நாட்டில் அதிக அளவில் தொடங்கிட முதலீடுகளை ஈர்த்திடும் வகையிலும், இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அமெரிக்க நாட்டில் அரசு முறைப் பயணம் மேற்கொண்டு வருகிறார். இந்த பயணத்தின் போது முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் உலகின் பல்வேறு முன்னணி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டதோடு, பல்வேறு நிறுவனங்களின் உயர் அலுவலர்களை சந்தித்து தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பும் விடுத்தார். இப்பயணத்தில் முதல்வர், அமெரிக்க வாழ் தமிழர்களை சந்தித்து, அமெரிக்க தமிழ்ச் சங்கங்களின் சார்பில் சான் பிரான்சிஸ்கோ மற்றும் சிகாகோவில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, தமிழ் சொந்தங்களோடு கலந்துரையாடினார்.

அதன் தொடர்ச்சியாக, நேற்று சிகாகோவில், முதல்வர் மு.க.ஸ்டாலினை, தமிழ்நாடு அறக்கட்டளை, வட அமெரிக்காவின் தமிழ்ச் சங்கங்களின்கூட்டமைப்பு,சிகாகோ தமிழ்ச் சங்கம், அறம் சிகாகோ, லேக் கவுண்டியில் உள்ள தமிழர்கள் சங்கம், அகரம் தமிழ் அகாடமி, அன்னை தமிழ் அகாடமி, செயின்ட் லூயிஸ் தமிழ் சங்கம், இந்தியா தமிழ்ச் சங்கம், கிரேட்டர் மில்வாக்கி தமிழ்ச் சங்கம், மெக்லீன் மாவட்ட தமிழ்ச் சங்கம், மிச்சிகன் தமிழ்ச்சங்கம், அயோவாதமிழ்ச்சங்கம், வடகிழக்கு விஸ்கான்சின் தமிழ்ச்சங்கம், விஸ்கான்சின்தமிழ்ச் சங்கம், மினசோட்டா தமிழ்ச் சங்கம், டென்னசி தமிழ்ச்சங்கம், கென்டக்கி தமிழ்ச் சங்கம், அமெரிக்க தமிழ் தொழில்முனைவோர் சங்கம், உலகளாவிய எங்கள் குழுக்கள் சங்கம், தமிழ் தொழில்நுட்ப தொழில் முனைவோர் கவுன்சில், எழுச்சி அமெரிக்கா சங்கம், கொலம்பஸ் தமிழ்ச் சங்கம், கன்சாஸ் தமிழ்ச் சங்கம், வடகிழக்கு ஓஹியோ தமிழ்ச் சங்கம், பியோரியா தமிழ்ச் சங்கம், டேட்டன்தமிழ்ச்சங்கம், அமெரிக்க தமிழ் மருத்துவ சங்கம் , அமெரிக்க தமிழ்ப் பள்ளிகள் சங்கம், கிரேட்டர் சின்சினாட்டி தமிழ்ச்சங்கம், குவாட் சிட்டி தமிழ்ச் சங்கம் ஆகிய சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து, தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அமெரிக்காவிற்கு அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ள முதல்வரின் பயணம் வெற்றி பெறவும், அதிக அளவிலான முதலீடுகள் தமிழ்நாட்டிற்கு கிடைத்திடவும் வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டனர்.

அப்போது, முதல்வர் மு.க.ஸ்டாலின், ''உங்களுக்குள் எந்தப் பிளவுகளும் ஏற்பட அனுமதிக்காதீர்கள். ஆண்டுக்கு ஒருமுறையாவது தமிழ்நாட்டுக்குக் குடும்பத்து டன் வாருங்கள்'' என்றும் கேட்டுக்கொண்டார். தங்களைச் சந்தித்ததில் அளவில்லா மகிழ்ச்சியடைந்ததாகவும், அமெரிக்க வாழ் தமிழர்களின் நல்வாழ்வு சிறக்க வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டார். இந்நிகழ்ச்சியின் போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, அயலகத்தமிழர்நலவாரியத்தின்தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி ஆகியோர் உடனிருந்தனர்.

# மீனவர்களை மீட்க கடிதம் எழுதினால் முதலமைச்சரின் கடமை முடிந்து விடுமா? அன்புமணி ராமதாஸ் கேள்வி




சென்னை, செப். 10

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப்பட்டினத்திலிருந்து சென்று வங்கக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் 14 பேரை சிங்கள கடற்படையினர் கைது செய்து காங்கேசன் துறை சிறையில் அடைத்திருக்கின்றனர்.

தற்போது 134 தமிழக மீனவர்கள் இலங்கை சிறையில் வாடிக்கொண்டிருக்கின்றனர். அவர்களின் குடும்பங்கள் வாழ்வாதாரம் இன்றி தவித்துக் கொண்டிருக்கின்றன. தமிழக மீனவர்களுக்கு சொந்தமான 187 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டு இலங்கை துறைமுகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

மீனவர்கள் சிக்கலுக்கு தீர்வு காணும் அதிகாரம் மத்திய அரசுக்கு தான் உள்ளது. என்றாலும், மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து விரைவாக தீர்வு காண செய்யும் பொறுப்பும், கடமையும் தமிழகஅரசுக்குஉண்டு. ஆனால், தயாராக எழுதி வைக்கப்பட்டிருக்கும் கடிதத்தில், கைது செய்யப்படும் மீனவர்களின் எண்ணிக்கையை மட்டும் மாற்றி கையெழுத்திட்டு மத்திய அரசுக்கு அனுப்புவதுடன் தமது கடமை முடிந்து விட்டதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்நினைத்துக் கொண்டிருக்கிறார். அமெரிக்காவிலிருந்து திரும்பியதும் பிரதமர் மற்றும் வெளியுறவுத்துறை மந்திரியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சந்தித்து தமிழ்நாட்டு மீனவர்கள்சிக்கலுக்கு நிரந்தர தீர்வு காண நடவடிக்கை எடுக்கும்படி வலியுறுத்த வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# அறிவியல்பூர்வமாக வளர்ந்து கொண்டு இருக்கும் நிலையில் மூடநம்பிக்கைகளை வளர்த்து கொண்டு செயல்பட வேண்டாம்: தயாநிதி மாறன் எம்பி பேட்டி



சென்னை, செப். 10

அறிவியல் பூர்வமாக வளர்ந்து கொண்டு இருக்கும் நிலையில், மூட நம்பிக்கைகளை வளர்த்து கொண்டு செயல்பட வேண்டாம் என தயாநிதி மாறன் எம்பி கூறினார். காஞ்சிபுரம் அருகே காரப்பேட்டை உள்ள நட்சத்திர ஓட்டலில் திமுக விளையாட்டு மேம்பாட்டு அணியின் மண்டல அளவிலான கலந்துரையாடல் கூட்டம் நடந்தது. இதில், சிறப்பு அழைப்பாளராக திமுக மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளரும், திமுக நாடாளுமன்ற குழு துணை தலைவருமான தயாநிதி மாறன் கலந்துகொண்டு ஆலோசனை வழங்கி பேசினார்.

கூட்டத்தில், காஞ்சிபுரம், திருவள்ளூர் உள்ளிட்ட மாவட்டத்தை சேர்ந்த அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். பின்னர், மண்டல அளவில் பங்கேற்ற அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களுக்கு நினைவு பரிசுகளையும் வழங்கினர்.

இதன் பின்பு செய்தியாளர்களை சந்தித்த அணியின் செயலாளரும், நாடாளுமன்ற குழு துணை தலைவருமான தயாநிதி மாறன் எம்பி கூறுகையில், 'விளையாட்டு மேம்பாட்டு அணி ஆரம்பித்து 20 மாதங்களில் தமிழகம் முழுவதும் சுமார் 180 விளையாட்டு போட்டிகளை நடத்தியுள்ளோம்.

அதிகளவில் கபடி, கிரிக்கெட் மற்றும் நீச்சல் போட்டிகளை நடத்தியுள்ளோம். அதிலும், சிறப்பாக ரோபோ போட்டியும் நடத்தியுள்ளோம். மேலும், வருகின்ற ஆண்டுகளில் ஒரு மாதத்திற்கு சுமார் 20 போட்டிகள் நடத்த திட்டமிட்டு ள்ளோம். அறிவியல் பூர்வமாக வளர்ந்து கொண்டு இருக்கும் நிலையில் மூட நம்பிக்கைகளை வளர்த்து கொண்டு செயல்பட வேண்டாம்' என்றார். பேட்டியின்போது, மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்எல்ஏ, எம்பி க.செல்வம், எம்எல்ஏ எழிலரசன், விளையாட்டு அணி அமைப்பாளர் ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



இந்தியப் பேனாநண்பர் பேரவை சார்பாக சர்வதேச அளவில் நடைபெற்ற சுதந்திர தினவிழா 2024, வள்ளுவர் போதித்த வாழ்வு நெறிகள் கட்டுரைப் போட்டியில் பங்கேற்ற தாராவி, காமராஜர் நினைவு ஆங்கில உயர்நிலைப் பள்ளி மற்றும் இளநிலைக் கல்லூரி மாணவ, மாணவியருக்கு இரண்டாம் பரிசுக்கான ரூ. 2000 மற்றும் 32 பங்கேற்புச் சான்றிதழ்களை_பேரவைத்ஸதலைவர் மா. கருண், கல்லூரி சேர்மன் திரு. எம். எஸ். காசிலிங்கம், செயலாளர் திரு. வி. மைக்கேல் ஜார்ஜ் ஆகியோர் முன்னிலையில் முதல்வர் பி. செல்வனிடம் வழங்கினார். பொதுச்செயலாளர் ஜெ. ஜான் கென்னடி, பொருளாளர் கோ. செல்லதம்பி, அறங்காவலர் திருமதி. பா. மலர்விழி, செயற்குழு உறுப்பினர்கள் செ. பாஸ்கர், தே. கோவில்ராஜ், தமிழாசிரியை திருமதி. ஷர்மிளா தேவகிருபை ஆகியோர் நிகழ்வில் பங்கேற்றனர்.

# போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்: தமிழக அரசு அறிவிப்பு



சென்னை, செப். 10

போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ள 6 மாத கால இலவச பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம் என்று தமிழகஅரசின்பயிற்சிமையம் தகவல் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

"டி.என்.பி.எஸ்.சி., எஸ்.எஸ்.சி., ஐ.பி.பி.எஸ்., ஆர்.ஆர்.பி. ஆகிய முகமைகள் நடத்தும் போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆர்வலர்களுக்கு தமிழக அரசின் சார்பில் போட்டித் தேர்வுகள் பயிற்சி மையங்கள் இயங்கி வருகிறது.

அந்த வகையில், கட்டணமில்லாப் பயிற்சி வகுப்புகள், சென்னை பழைய வண்ணாரப்பேட்டையில் உள்ள சர் தியாகராயா கல்லூரி வளாகத்தில் 500 ஆர்வலர்களுக்கும், சென்னை சேப்பாக்கத்தில் உள்ள மாநிலக் கல்லூரி வளாகத்தில் 300 ஆர்வலர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

மேற்படி போட்டித் தேர்வுகளில் கலந்துகொள்ளும் ஆர்வலர்களுக்கான பயிற்சி வகுப்புகளுக்கு இணைய வழியாக விண்ணப்பங்கள் பெற்று, புதிதாக சேர்க்கை நடைபெற உள்ளது. பயிற்சி வகுப்புகள் பிற்பகல் 2 மணி முதல் 5 மணி வரை 6 மாத காலம் வாராந்திர வேலை நாட்களில் நடைபெற உள்ளது.

பயிற்சி வகுப்புகளில் சேர விரும்பும் ஆர்வலர்கள் குறைந்தபட்சம் 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருப்பதோடு 112024 அன்று 18 வயது பூர்த்தி செய்திருக்க வேண்டும். மேற்படி போட்டித் தேர்வுகள் பயிற்சி மையங்களில் உணவு மற்றும் தங்கும் வசதிகள் இல்லை.

பயிற்சியில் சேர விரும்பும் ஆர்வலர்கள் போட்டித் தேர்வுகள் பயிற்சி மைய இணையதளம் *www.cecc.in* வாயிலாக 1092024 முதல் 2492024 வரை விண்ணப்பிக்கலாம். பயிற்சி வகுப்புகளில் சேர்க்கை தொடர்பான கூடுதல் விவரங்களை மேற்குறிப்பிட்ட இணையதள முகவரியில் பார்த்து தெரிந்துகொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு 044 25954905 மற்றும் 044 28510537 ஆகிய தொலைபேசி எண்களை தொடர்பு கொள்ளலாம்.

எஸ்.எஸ்.எல்.சி.யில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் தமிழக அரசால் நடைமுறைபடுத்தப்பட்டுள்ள இனவாரியான இடங்களுக்கு ஏற்ப ஆர்வலர்கள் தெரிவு செய்யப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் விவரங்கள் மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் வெளியிடப்படும். அக்டோபர் மாதம் 2வது வாரத்தில் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்படும்."

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# விழுப்புரத்தில் புதிய ஏஎஸ்பி ரவீந்திர குமார் நியமனம்



விழுப்புரம், செப். 10

விழுப்புரம் மாவட்டம், காவல் உட்கோட்டத்தில் 090924 திங்கட்கிழமை அன்று, உதவி காவல் கண்காணிப்பாளராக ரவீந்திர குமார் புதிய பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

அவரது நியமனம் அன்றைய தினம் நிகழ்த்தப்பட்ட ஒரு சிறப்பான விழாவுடன் அறிவிக்கப்பட்டது.

மூன்று ஆண்டுகளுக்கு மேலாக அனுபவம் கொண்ட ரவீந்திர குமார், அவற்றில் முக்கியமான நெறியியல் மற்றும் விசாரணை பணிகளை மேற்கொண்டுள்ளார். புதிய பொறுப்பில் அவர், மாவட்டத்தின் காவல்துறையின் செயல்திறனை மேம்படுத்தும் முயற்சியில் ஈடுபடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிகழ்ச்சி மாவட்ட காவல்துறை அலுவலர்கள், சமூக நல அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் நடந்தது. நியமனம் தொடர்பான சிறப்புப் பேசுகையில், ரவீந்திர குமார், தனது புதிய பதவியில், சட்டம் மற்றும் ஒழுங்கை எப்போதும் முன்னிலைப்படுத்துவதாகக் கூறியுள்ளார்.

# சிவகங்கையில் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பாக உலக எழுத்தறிவு தின கருத்தரங்கம்



சிவகங்கை:செப் 10

சிவகங்கையில் தமிழ்நாடு அறிவொளி இயக்கம் சார்பாக உலக எழுத்தறிவு தினகருத்தரங்கம்மாவட்ட ஆட்சியர் அலுவலக அறிவொளி பூங்கா உலக எழுத்தறிவு நினைவுத்தூண் அருகில் நடைபெற்றது.

தமிழ்நாடு அறிவியல் இயக்க சங்கத் தலைவர் கோபிநாத் கருத்தரங்கத்திற்கு தலைமை தாங்கினார், கலைக்குழுக்களின் கலை நிகழ்ச்சிகளுடன் அறிவொளி இயக்க தொண்டர்கள் பேரணியாக மாவட்ட ஆட்சியர் வளாகம் வந்தடைந்தனர் மாற்று ஊடக மையத்தின் நிறுவனர் பேராசிரியர் காளீஸ்வரன் தலைமையில் ஓய்வு பெற்ற முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளர் முன்னாள் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் குத்சியா காந்தி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

தமிழ்நாடு அறிவியல் இயக்க மாநில செயற்குழு உறுப்பினர் ஜீவானந்தம் தலைமையில் கல்வியின் முன்னுள்ள சவால்கள் குறித்து பொதுக் கல்விக்கான மாநில மேடை பொதுச்செயலாளர் பிரின்ஸ் கஜேந்திர பாபு கருத்துரையாற்றினார். நல்லாசிரியர் மோகனசுந்தரம் தலைமையில் ஆணும் பெண்ணும் சமமானவர்கள் என்ற தலைப்பில் தமிழ்நாடு அறிவியல் இயக்க மாநில செயற்குழு உறுப்பினர் ராதா முருகேசன் கருத்துரை ஆற்றினார். அறிவொளி உறுப்பினர் ராஜேந்திரன் தலைமையில் கல்வியில் அன்றும் இன்றும் என்ற தலைப்பில் முன்னாள் தமிழ்நாடு அறிவியல் இயக்க மாநில பொதுச் செயலாளர் சுப்பிரமணி கருத்துரையாற்றினார். மதிய சென்னை மாற்று ஊடக மைய கலைக்குழுவின் கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

தமிழகத்தில் சிவகங்கை மாவட்டத்தை முதல் எழுத்தறிவு பெற்ற மாவட்டமாக்கிய முன்னாள் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் குத்சியா காந்தி நிறைவுரை யாற்றினார். மாணிக்கவள்ளி நன்றியுரை கூறினார். விழா ஏற்பாட்டினை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பால சுப்பிரமணியன் தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயலாளர் ஆரோக்கிய சாமி மாவட்ட இணை ஒருங்கிணைப்பாளர் முருகானந்தம் மெய்யப்பன் ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். மாவட்டத் துணைச் செயலாளர் ராசு நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். சிவகங்கை மாவட்டத்தின் பல்வேறு ஒன்றியங்களில் இருந்து அறிவொளி இயக்க தொண்டர்கள் ஒன்றாக இணைந்து மலரும் நினைவுகளை பகிர்ந்து கொண்டார்கள். மாவட்ட பொருளாளர் பிரபு கௌரவத் தலைவர் சாஸ்தா சுந்தரம் சிவகங்கை கிளைச் செயலாளர் அனந்தகிருஷ்ணன் மாவட்ட துணைத் தலைவர் முனைவர் சேவற்கொடியோன் கவிஞர் தமிழ்கனல் மணிமேகலை செல்வ சுந்தரி ஏழுமா அறிவொளி காளீஸ்வரன் எழுத்தாளர் ஈஸ்வரன் நீலா ஆசிரியர் பிரதிநிதிகள் அறிவொளி உறுப்பினர்கள் குடும்பத்தோடு கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

# திண்டுக்கல்: காதல் விவகாரத்தில் சிறுமியை துப்பாக்கியால் சுட்ட இளைஞர்




திண்டுக்கல், செப். 10

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே உள்ள பகுதியை சேர்ந்த 17 வயது சிறுமியை மதுரை மாவட்டம் மேலூர் பகுதியை சேர்ந்த செல்வம் என்ற இளைஞர் காதலித்து வந்துள்ளார். இருவரும் அடிக்கடி சந்தித்து பேசி வந்துள்ளனர்.

இந்த நிலையில், உறவினர் வீட்டு நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக சென்ற செல்வம், அங்கு தனது காதலியை அழைத்து பேசியுள்ளார். அப்போது, செல்வத்துக்கும் வேறொரு பெண்ணுக்கும் இடையே தொடர்பு இருப்பதாக கூறி காதலி வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். வாக்குவாதம் முற்றிய நிலையில், ஆத்திரம் அடைந்த செல்வம், உறவினரின் வீட்டில் இருந்த நாட்டுத்துப்பாக்கியால் காதலியை சுட்டுள்ளார்.

இதில் படுகாயமடைந்த சிறுமியை அக்கம் பக்கத்தினர் மீட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றனர். சிறிது நேரத்தில் செல்வமும் எலி மருந்தை உட்கொண்டுதற்கொலைக்கு முயன்றுள்ளார். அவரையும் அக்கம்பக்கத்தினர் மீட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றனர். இருவருக்கும் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த சம்பவம் குறித்து அறிந்த போலீசார், வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். காதல் விவகாரத்தில் சிறுமியை இளைஞர் ஒருவர் துப்பாக்கியால் சுட்ட சம்பவம் அப்பகுதி மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# த.வெ.க. தலைவர் விஜய்க்கு அன்பையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்: சீமான்



சென்னை, செப். 10

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்து இருப்பதாவது;

"தமிழ்நாடு அரசியலில் புதிய மாற்றத்தை உருவாக்கும் நோக்கில், என் ஆருயிர் இளவல், அன்புத்தளபதி விஜய் அவர்களின் தலைமையில் தொடங்கப்பட்ட தமிழக வெற்றிக் கழகத்தை அரசியல் கட்சியாகப் பதிவு செய்தமையை இந்தியத் தேர்தல் ஆணையம் ஏற்றுக்கொண்டிருக்கிற செய்தியறிந்து பெருமகிழ்ச்சியடைகிறேன்.

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் அன்புத் தம்பி விஜய் அவர்களுக்கும், அதன் பொதுச்செயலாளர் அன்புச்சகோதரர் புஸ்ஸி ஆனந்த் அவர்களுக்கும், ஏனைய நிர்வாகிகள் அனைவருக்கும் என் அன்பினையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்."

இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

# தருமபுரியில் காவிரி உபரிநீர் திட்டம் நிறைவேற்றாவிட்டால் போராட்டம் அன்புமணி ராமதாஸ்



தருமபுரி, செப். 9

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ், தருமபுரியில் கட்சி நிர்வாகி இல்லத்திருமண விழாவில் கலந்துகொண்டார். அதன் பின்னர் நிருபர்களை சந்தித்த அவர் கூறியதாவது;

தருமபுரி மாவட்டத்தில் ஒரே ஒரு பிரச்சினை பெரிய பிரச்சினையாக உள்ளது. அது தண்ணீர் பிரச்சினை. இந்த பிரச்சினையை தீர்க்க பா.ம.க.வினர் பல கட்டங்களாக போராட்டங்களை மருத்துவர் ராமதாஸ் தலைமையில் அரங்கேற்றி இருக்கிறோம். அதன் விளைவாக நிறைவேற்றப்பட்டது தான், ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டம்.

தருமபுரி மாவட்டம் முழுவதும் விவசாயம் நிறைந்த மாவட்டம் திகழ்கிறது. அப்படிப்பட்ட இந்த மாவட்டத்தில் விவசாயத்திற்கு தண்ணீர் வசதி இல்லாததால், 2, 3, அல்லது 5 ஏக்கர் வரை நிலம் வைத்து முதலாளியாக இருந்த விவசாயிகள் தற்போது கூலி ஆட்களாக திருப்பூர், கோவை, சென்னை உள்ளிட்ட மாவட்டங்களுக்கும், பெங்களூரு, ஆந்திரா போன்ற வெளி மாநிலங்களுக்கும் தினக் கூலிகளாக வேலைக்கு செல்கின்றனர்.

பல கட்டங்களாக போராட்டம் நடத்திய தன் விளைவாக சென்ற ஆட்சியில் காவிரி உபரி நீர் திட்டம் நிறைவேற்றுவதாக ஒரு அறிவிப்பையும் முன்பு இருந்த அரசு வெளியிட்டது. இந்த நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு முதல் அமைச்சராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற பிறகு காவிரி உபரி நீர் திட்டம் குறித்து எந்த வித அறிவிப்பு இதுவரை வெளியிடவில்லை. இந்த ஆண்டு காவிரி ஆற்றில் ஒரு நாள் மட்டும் 17 டி.எம்.சி தண்ணீர் கடலில் வீணாக கலந்து உள்ளது.

ஆனால், தருமபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்து ஏரிகளுக்கும் உபரி நீரை நிரப்புவதற்கு 2 டி.எம்.சி. தண்ணீர் போதுமானது. இந்த தண்ணீர் ஒரு ஆண்டிற்கு போதுமானது. இதைக் கூடநிறைவேற்றதி.மு.க. அரசுக்கு மனமில்லை. அதனால் அகிம்சை முறையில் முதற்கட்டமாக அடுத்த மாதம் 4ந்தேதி தருமபுரியில் காலை 6 மணி முதல் மதியம் 12 மணிவரை அனைத்து கடைகள் அடைப்பு போராட்டம் நடைபெறும். இதற்கு அரசுக்கு செவி சாய்க்கவில்லை என்றால், எங்களது போராட்டம் வேறு விதமாக இருக்கும்."

இவ்வாறு அவர் பேசினார்.

# அரங்கண்டநல்லூர் ஏரியில் 10க்கும் மேற்பட்ட விநாயகர் சிலைகள் கரைக்கப்பட்டன



விழுப்புரம், செப். 10

அரங்கண்டநல்லூர் ஏரியில்10க்கும்மேற்பட்ட விநாயகர் சிலைகள் கரைக்கப்பட்டன.

விழுப்புரம் மாவட்டம் கண்டாச்சிபுரம் வட்டம் அரங்கண்டநல்லூர் பேரூராட்சி பகுதியில் உள்ள ஏரியில் விநாயகர் சிலைகள் கரைப்பது வழக்கம் அதே போல் 2024 ஆம் ஆண்டும் விநாயகர் பண்டிகையை முன்னிட்டு விநாயாகர் சிலை வைத்து வழிபாடு செய்து 3 ஆம் நாள் மேளம் தாலங்களோடுஆடிப்பாடி ஆறுகள்,ஏரிகள் மற்றும் குளத்திற்கு எடுத்து சென்று பாதுகாப்பாக கரைத்தனர். இதில் அரங்கண்டநல்லூர் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து15க்கும்மேற்பட்ட விநாயகர் சிலைகள் ஏரியில் கரைக்கப்பட்டது. இதற்குகாவல்துறையினர், தீயணைப்பு துறையினர் ஊர் காவல் படையின் மற்றும் வருவாய் துறையினர் பாதுகாப்பாக உடன் இருந்தனர்.

# விசாரிக்கும் போது அடித்ததற்கு வாலிபரிடம் வருத்தம் தெரிவித்த பெண் எஸ்ஐ: வைரலாகும் ஆடியோ

கள்ளக்குறிச்சி, செப். 10

விசாரணையின்போது என்னை ஏன் அடித்தீர்கள் என்று கேட்ட கள்ளக்குறிச்சி பகுதி வாலிபரிடம், பெண் எஸ்ஐ கோபத்தில் அடித்து விட்டேன் எனக் கூறி வருத்தம் தெரிவிக்கும் ஆடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

கள்ளக்குறிச்சி மாவட்டம் பொற்படாக்குறிச்சி கிராமத்தைச்சேர்ந்தவிஜயகுமார் (34) என்பவருக்கும், அவரது உறவினர் லோகநாதன் என்பவருக்கும் ஏற்கனவே சொத்து பிரச்னை இருந்து வருகிறது. கடந்த வாரம் இருவருக்கும் அடிதடி ஏற்பட்டு கள்ளக்குறிச்சி காவல் நிலையத்தில் தனித்தனியாக புகார் அளித்துள்ளனர். இதுகுறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். விசாரணையின்போது விஜயகுமாரைபெண்உதவி ஆய்வாளர் தாக்கியதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் நெஞ்சுவலி ஏற்பட்டு அவர் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். இதற்கிடையே விஜயகுமார், அவரிடம் விசாரணை நடத்திய பெண் உதவி ஆய்வாளரை தொலைபேசியில்தொடர்பு கொண்டு 10 நிமிடம் என்னிடம் விசாரணை நடத்தினீர்கள்,

அப்போது என்னை எதற்கு அடித்தீர்கள்? 2 தரப்பையும் அழைத்து விசாரிக்க வேண்டுமா... இல்லையா... என்று கேட்டுள்ளார். அதற்கு உதவி பெண் ஆய்வாளர் 'கோபத்தில் அடித்து விட்டேன்' என்று வருத்தம் தெரிவிக்கும் வகையில் பேசும் ஆடியோ ஒன்று வெளியாகி சமூக வலைதளங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



தமிழக வெற்றிக் கழகம் சார்பில் செஞ்சி ஒன்றியம் செம்மேடு கிளை புதிதாக திறக்கப்பட்டது... இந்த நிகழ்வுகளில் தமிழக வெற்றிக் கழகம் பொதுசெயலாளர் புஸ்ஸி ஆனந்துEx Mla அவர்களின் வழிகாட்டுதலின்படியும் விழுப்புரம் மாவட்ட பொறுப்பாளர் பரணி பாலாஜி அவர்களின் வழிகாட்டுதலின் படி எங்கள் அண்ணன் குஷி மோகன் அறிவுத்தலின் படி பொதுமக்களுக்கு இலவச புடவை வேட்டி பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகம் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது. இவ்விழாவை தலைமை ஏற்று கட்சி கொடியை ஏற்றிவைத்தார் ..செஞ்சி ஒன்றிய தலைவருமான செஞ்சி சட்டமன்ற பொறுப்பாளர் ஜெ. தமிழரசன் கலந்துக்கொண்டு கொடி ஏற்றினார்... இந்த நிகழச்சியில் ஒன்றிய நகர நிர்வாகிகள் கலந்துக்கொண்டனர்.இவ்விழா ஏற்பாடு செய்தவர் செஞ்சி ஒன்றிய துணை செயலாளர் கருணாகரன் எற்பாடு செய்தார்.

# தேனியில் விநாயகர் சிலை ஊர்வலம்: டிராக்டர் கவிழ்ந்து 3 சிறுவர்கள் பலி



தேனி, செப். 10

விநாயகர் சதுர்த்தி விழா நேற்று நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. அந்த வகையில் தேனி மாவட்டம் தேவாரத்தில் விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாடப்பட்டது.

விழாவின்போது விநாயகர் சிலையை டிராக்டரில் வைத்து ஊர்வலமாக கொண்டு சென்றனர். அப்போது எதிர்பாராத விதமாக டிராக்டர் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இச்சம்பவத்தில் 3 சிறுவர்கள் உயிரிழந்தனர். மேலும், 2 பேர் படுகாயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து வந்த போலீசார் படுகாயமடைந்த 2 பேரை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். உயிருக்கு ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்ட 2 பேருக்கும் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இச்சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கடன் தொல்லை ரயில்வே ஊழியர் தண்டவாளத்தில் தலை வைத்து தற்கொலை

ஜோலார்பேட்டை, செப். 10

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை அடுத்த சோமநாயக்கன் பட்டி ஊராட்சி, டி.வீரப் பள்ளி போயர் வட்டத்தை சேர்ந்தவர்சீனிவாசன்(63), ஓய்வு பெற்ற ரயில்வே ஊழியர். கடன் தொல்லையாலும், பல்வேறு உடல் பாதிப்புகளாலும் அவதிப்பட்டு வந்ததாக கூறப்படுகிறது. இந்நிலையில், நேற்று காலை சீனிவாசன் தனது மனைவி ஆனந்தியிடம், மாத்திரை வாங்கி வருவதாக கூறி விட்டு மொபட்டில் சென்றுள்ளார்.

பின்னர் சோமநாயக்கன் பட்டி ரயில்வே காவல் நிலையத்திற்கும், ஜோலார்பேட்டை ரயில்வே காவல் நிலையத்திற்கும் இடையே பைரவன் வட்டம் பகுதியில் மொபட்டை நிறுத்திவிட்டு, தண்டவாளத்தில் தலை வைத்து படுத்துள்ளார். அப்போது, பெங்களூருவில் இருந்து ஜோலார்பேட்டை வந்த வந்தே பாரத் ரயிலில் சிக்கி சீனிவாசன் உடல் சிதறி பலியானார்.

# தேனி அரசு சட்டக்கல்லூரி அமைப்பதற்கான இடம் யாரால் தேர்வு செய்யப்பட்டது: ஐகோர்ட் கேள்வி

தேனி, செப். 10

தேனியில் அரசு சட்டக்கல்லூரி அருகே உள்ள உரக்கிடங்கை வேறு இடத்துக்கு மாற்றக் கோரிய வழக்கில் சட்டக்கல்லூரி அமைப்பதற்கான இடம் யாரால் தேர்வு செய்யப்பட்டது என அரசு தரப்பு அறிக்கை தாக்கல் செய்ய உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும் சட்டக்கல்லூரி உள்ள பகுதியில் காற்று, நீரின் தரம் குறித்து அறிக்கை தர மாசு கட்டுப்பாட்டு வாரியத்துக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# பாசனத்திற்கு தண்ணீர் திறப்பால் வைகை அணை நீர்மட்டம் சரிவு



கூடலூர், செப். 10

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே உள்ள வைகை அணை மூலம் 5 மாவட்ட விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றது. 71 அடி உயரம் கொண்ட அணையில் தொடர் மழை காரணமாக அணையின் நீர்மட்டம் உயர்ந்தது. மேலும் பாசனத்திற்கான தண்ணீர் நிறுத்தப்பட்டதால் முழு கொள்ளளவை எட்டும் என விவசாயிகள் எதிர்பார்த்திருந்தனர்.

இந்த நிலையில் மதுரை மாவட்ட பாசனத்திற்காக அணையில் இருந்து 900 கன அடிநீர் திறக்கப்பட்டு வருகிறது.

மேலும் மழை ஓய்ந்ததால் அணைக்கு நீர்வரத்தும் 306 கன அடியாக குறைந்துள்ளது. இதனால் அணையின் நீர்மட்டம் 64 அடியில் இருந்து வேகமாக சரிந்து இன்று காலை 62.89 அடியாக குறைந்தது.

குடிநீருக்கான 69 கன அடி நீர் சேர்த்து 969 கன அடி நீர் திறக்கப்படுகிறது. அணையில் 4180 மி.கன அடி நீர் இருப்பு உள்ளது.

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 131.65 அடியாக உள்ளது. அணைக்கு 807 கன அடி நீர் வருகிறது. அணையில் இருந்து தமிழக பகுதிக்கு 800 கன அடி நீர் திறக்கப்படுகிறது. 5083 கன அடி நீர் இருப்பு உள்ளது.

மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 55 அடியாக உள்ளது. வரத்தும் திறப்பும் இல்லை. சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் 124.15 அடியாக உள்ளது. வரத்து இல்லாத நிலையில் 3 கன அடி நீர் திறக்கப்படுகிறது.

# கேரளாவிலிருந்து மீன் கழிவுநீரை கொண்டு வந்து பொள்ளாச்சி சாலையில் கொட்டிய லாரி சிறைபிடிப்பு





கோவை, செப். 10

கேரளாவிலிருந்து மீன் மற்றும் இறைச்சிக் கழிவு நீரை கொண்டு வந்து பொள்ளாச்சி சாலையில் கொட்டிய லாரி சிறைபிடிக்கப்பட்டுள்ளது. மீன்கள் கெட்டு போகாமல் இருக்க ஐஸ் கட்டிகளை வைத்து மீன்களை பதப்படுத்தி லாரியில் எடுத்துச் செல்லப்பட்டது. பொள்ளாச்சி அருகே கோமங்கலம் பகுதிக்கு லாரி வந்த போது அதிக வெப்பத்தால் ஐஸ் கட்டி உருகியதால் லாரியை நிறுத்தி மீன் கழிவு நீரை ஓட்டுநர் திறந்துவிட்டுள்ளார். இதனால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசியது.

இது தொடர்பாக அப்பகுதியை சார்ந்த கிராமமக்கள் உடனடியாக லாரியை சிறைபிடித்து போலீசாருக்கு தகவல் கொடுத்தனர். தகவலின் அடிப்படையில் லாரி பறிமுதல் செய்யப்பட்டது. இது போன்று 3 முறை மீன் கழிவுகள் கொட்டப்பட்டதாக கிராமமக்கள் புகார் தெரிவித்தனர்.

இந்த நிலையில் பறிமுதல் செய்யப்பட்ட லாரி மற்றும் ஓட்டுநர் மீதும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என போலீசாரிடம் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யக்கூடிய பணியை போலீசார் மேற்கொண்டுள்ளனர். வாகனத்தின் மீது 50ஆயிரம் வரை அபராதம் விதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மேட்டூர் அணை நீர்மட்டம் 115 அடியாக குறைந்தது



சேலம், செப். 10

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழையின் காரணமாக நீர்வரத்து அதிகரித்து அங்குள்ள அணைகள் நிரம்பியது. பின்னர் அங்கிருந்து வெளியேற்றப்பட்ட உபரிநீர் அதிகளவில் வந்ததால் மேட்டூர் அணையும் நிரம்பியது.

நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழையின் தீவிரத்தை பொறுத்து மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தும், குறைந்தும் வந்து கொண்டு இருக்கிறது. இந்த நிலையில் அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டு வருவதால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் குறைந்து வந்தது. இதற்கிடையே நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மீண்டும் மழை பெய்ததால் நீர்வரத்து அதிகரித்து அணையின் நீர்மட்டம் உயர்ந்து வந்தது. தற்போது மீண்டும் நீர்வரத்து குறைந்து விட்டது. அணைக்கு வரும் தண்ணீரை விட அதிகளவில் பாசனத்துக்கு வெளியேற்றப்பட்டு வருவதால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் இன்று காலை 115,93 அடியாக குறைந்தது. அணைக்கு வினாடிக்கு 16 ஆயிரத்து 794 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. அணையில் இருந்து டெல்டாவுக்கு 19 ஆயிரம் கனஅடியும், கால்வாய் பாசனத்துக்கு 700 கனஅடியும் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. ஆனாலும் 100 அடிக்கு குறையாமல் கடந்த 50 நாட்களுக்கும் மேலாக மேட்டூர் அணை நீர்மட்டம் இருந்து வருகிறது.

# மிலாது நபி பண்டிகைக்கான அரசு விடுமுறை: செப்.16ம் தேதிக்கு பதிலாக 17ம் தேதி அறிவித்து தமிழக அரசு உத்தரவு




சென்னை, செப். 10

மிலாடி நபி பண்டிகையை முன்னிட்டு வருகின்ற 17ம் தேதி தமிழகத்தில் பொது விடுமுறை அளிக்கப்படுவதாக தமிழக அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இறைத்தூதரான நபிகள் நாயகம் இஸ்லாம் மதத்தை தோற்றுவித்ததோடு, மறை நூலான திருக்குர்ஆனை உலகுக்கு அறிவித்தவர். இவரது பிறந்தநாள், மிலாடி நபியாக கொண்டாடப்படுகிறது. கி.பி. 570ம் ஆண்டு ரபி உல் அவ்வல் மாதம் எனப்படும் இஸ்லாமிய நாட்காட்டியின் மூன்றாவது மாதத்தின் 12ம் நாளில் மக்கா நகரில் நபிகள் நாயகம் அவதரித்த நாளையே மிலாடி நபியாக இஸ்லாமிய மதத்தினர் கொண்டாடுகின்றனர்.

மிலாடி நபி அன்று புனித நூலான குர்ஆனை வாசிப்பது இஸ்லாமியர்களிடம் கடமையாக பார்க்கப்படுகிறது. இறை தூதர் முகமது நபிகள் பிறந்த தினத்தை மிலாது நபி விழாவாக மகிழ்ச்சியுடன் உலகம் முழுவதும் உள்ள இஸ்லாமிய மக்கள் கொண்டாடி வருகின்றனர். தமிழகத்தில் இந்த ஆண்டு செப்.16ம் தேதி மிலாடி நபி கொண்டாடப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில், செப்.4ம் தேதி மாலை ரபிஉல் அவ்வல் மாத பிறை சென்னை மற்றும் இதர மாவட்ங்களில் தெரியாததால், செப்.16க்கு பதில், மறுநாள் செப்.17ம் தேதி மிலாடி நபி கொண்டாடப்படும் என்று அரசு தலைமை காஜி சலாவுதீன் முகமது அயூப் சில தினங்கள் முன் அறிவித்தார். இந்த அறிவிப்பை ஏற்று, தமிழக அரசு தற்போது செப்.17ம் தேதியை அரசு விடுமுறை தினமாக அறிவித்துள்ளது.

இது தொடர்பாக தமிழக தலைமைச் செயலர் நா.முருகானந்தம் வெளியிட்ட அறிக்கையில், “செலாவணி முறிச்சட்டத்தின் அடிப்படையில், செப்டம்பர் 16ம் தேதிக்கு பதில், செப்.17ம் தேதி மிலாடி நபி பொது விடுமுறை நாளாக அறிவிக்கப்படுகிறது. இந்த பொது விடுமுறையானது அனைத்து அரசு பொதுத்துறை நிறுவனங்கள், கழகங்கள், வாரியங்கள் உள்ளிட்டவற்றுக்கும் பொருந்தும்” என்று தெரிவித்துள்ளார்.

# ஊரக உள்ளாட்சி தேர்தல் நடத்த ஆயத்தம்... கலெக்டர்களுக்கு மாநில தேர்தல் ஆணையம் சுற்றறிக்கை




சென்னை, செப். 10

தமிழகத்தில் உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் 25 மாநகராட்சிகள், 142 நகராட்சிகள், 561 பேரூராட்சிகள், 12 ஆயிரத்து 525 கிராம ஊராட்சிகளும், 388 ஊராட்சி ஒன்றியங்களும், 36 மாவட்ட ஊராட்சிகளும் இயங்கி வருகின்றன. இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில தேர்தல் ஆணையம் மூலம் தேர்தல் நடத்தப்படுகிறது.

அதன்படி கடந்த 2019ம் ஆண்டில் 27 மாவட்டங்களுக்கு ஊரக உள்ளாட்சி தேர்தல் நடைபெற்றது. வார்டு மறுவரையறை, மாவட்ட எல்லை பிரிவு விவகாரம் போன்ற காரணங்களால் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய 9 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மட்டும் கடந்த 2021ம் ஆண்டு அக்டோபர் மாதம் தேர்தல் நடைபெற்றது.

இந்த நிலையில் 27 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சி தேர்தலில் வெற்றி பெற்று பதவி ஏற்ற தலைவர்கள், வார்டு கவுன்சிலர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள் உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் பதவிக்காலம் வருகிற ஜனவரி 5ந்தேதியுடன் நிறைவடைகிறது.

எனவே, இந்த 27 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சி தேர்தலை நடத்துவதற்கான ஆயத்தப்பணியில் மாநில தேர்தல் ஆணையம் ஈடுபட்டுள்ளது. இதுதொடர்பாக தமிழக மாநில தேர்தல் ஆணையத்தின் செயலாளர் கி.பாலசுப்பிரமணியம் மாவட்ட கலெக்டர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பி உள்ளார். அதில் கூறியிருப்பதாவது:

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு எதிர்வரும் சாதாரண, தற்செயல் தேர்தல்களை முன்னிட்டு, தேர்தல்களுக்கு தேவையான அனைத்து வகையான வாக்குப்பதிவு பொருட்களையும் தயார் நிலையில் வைத்திருப்பது அவசியமாகிறது. இதில், வாக்குப்பதிவுக்கு பயன்படுத்தப்படும் வாக்கு பெட்டிகளை தயார் நிலையில் வைக்க வேண்டும். எனவே, ஊரக உள்ளாட்சி தேர்தல்களுக்கு பயன்படுத்தப்படும் அனைத்து வகையான வாக்கு பெட்டிகள், தற்போதைய தரம் மற்றும் நிலையை, மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) நேரடியாக ஆய்வு செய்து, அவற்றின் தன்மையினை ஆராய வேண்டும்.

அதாவது, வாக்குப்பதிவுக்கு பயன்படுத்தும் வகையில் நல்ல நிலையில் உள்ளவை, சிறிதளவு பழுதடைந்து, அதனை சரி செய்வதன் மூலம் வாக்குப்பதிவுக்கு மீண்டும் பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ளவை, முழுவதும் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளவை என வகை பிரித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தூத்துக்குடி சிறையில் மோதல் சம்பவம்: 46 கைதிகள் மீது 6 பிரிவுகளில் வழக்கு




தூத்துக்குடி, செப். 10

தூத்துக்குடி பேரூரணி சிறையில் கைதிகள் இரு பிரிவுகளாக மோதிக் கொண்டதில் டியூப் லைட்டுகள், சிசிடிவி கேமரா, டிவி ஆகியவை உடைக்கப்பட்டன. இந்த சம்பவம் தொடர்பாக 46 பேர் மீது 6 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதோடு, அவர்கள் பல்வேறு சிறைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர். தூத்துக்குடி மாவட்டம் புதுக்கோட்டை அருகே பேரூரணியில் மாவட்ட சிறைச்சாலை உள்ளது. இங்கு நெல்லை, தென்காசி, தூத்துக்குடி, விருதுநகர், குமரி மாவட்டங்களைச் சேர்ந்த 215 விசாரணை கைதிகள் மற்றும் தடுப்புக் காவல் கைதிகள் மொத்தம் 5 தொகுதிகளில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்த சிறையில் கைதிகளுக்கு மின்விசிறி வசதி வழங்கப்பட்டுள்ளது.

தினமும் மாலையில் சிறைக்குள் அடைக்கப்படும் கைதிகள், இரவில் மின் விசிறிக்கு கீழே தூங்க இடம் பிடிப்பதில் அவர்களுக்கு இடையே அவ்வப்போது தகராறு ஏற்படுவது வழக்கம். இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு 2வது தொகுதியில் அடைக்கப்பட்டிருந்த 57 கைதிகளில் 46 பேருக்கு இடையே மின்விசிறியின் கீழே பாய் விரித்து படுப்பதில் தகராறு ஏற்பட்டது. தகராறு முற்றி கைகலப்பானதில் கைதிகள் இரு பிரிவுகளாக பிரிந்து மோதிக் கொண்டனர். மேலும், சிறையில் பொருத்தப்பட்டிருந்த 17 டியூப் லைட்டுகள், எல்இடி டிவி, சிசிடிவி கேமரா, ஸ்விட்ச் போர்டு ஆகியவை உடைக்கப்பட்டன. இதுகுறித்து சிறைத்துறை உயரதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

மேலும் சம்பவம் குறித்து தட்டப்பாறை போலீசில் புகார் செய்யப்பட்டது. அதன்பேரில், சிறையில் மோதலில் ஈடுபட்ட 46 சிறை கைதிகள் மீது கொலை மிரட்டல், அரசு பணி செய்ய விடாமல் தடுத்தது, சிறைக்குள் கலவரத்தை ஏற்படுத்தி அரசு சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தது உள்ளிட்ட 6 பிரிவுகளில் இந்திய தண்டனை சட்டத்தின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் சிறைக்குள் இரு பிரிவுகளாக பிரிந்து மோதலில் ஈடுபட்ட இந்த 46 கைதிகளும், கன்னியாகுமரி, தென்காசி, திண்டுக்கல், தேனி, மதுரை ஆகிய மாவட்ட சிறைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

# ஒரு லட்சம் பேருக்கு விரைவில் புதிய குடும்ப அட்டை



சென்னை, செப். 10

தமிழகத்தில் புதிதாக விண்ணப்பித்தவர்களுக்கு சுமார் 1 லட்சம் பேருக்கு விரைவில் புதிய குடும்ப அட்டை வழங்கப்படும் என உணவு வழங்கல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அனைத்து மாவட்டங்களிலும் சேர்த்து 2 கோடியே 24 லட்சத்து 13 ஆயிரத்து 920 குடும்ப அட்டைகள் உள்ளன. இந்த நிலையில் கடந்த ஓராண்டுக்கும் மேலாக புதிய குடும்ப அட்டை கோரி 3 லட்சம் பேர் விண்ணப்பித்துள்ளனர். அதில் முதல் கட்டமாக 92 ஆயிரம் விண்ணப்பதாரர்களுக்கு குடும்ப அட்டை வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

தற்போது வரை சுமார் 80ஆயிரம் பேருக்கு புதிய ரேஷன் கார்டுகள் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ளவர்களுக்கும் தொடர்ந்து வழங்கப்பட உள்ளது. இதனிடையே 2.80 லட்சம் பேர் விண்ணப்பித்திருந்த நிலையில் சுமார் 1 லட்சம் பேருக்கு தற்போது ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ளவர்களுக்கு விரைவில் சரிபார்க்கும் பணி முடிந்து அட்டைகள் வழங்கப்படும் உணவு வழங்கல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# மகன்களுடன் விநாயகர் சதுர்த்தி கொண்டாடிய நடிகை நயன்தாரா.. வைரலாகும் வீடியோ





இயக்குநர் விக்னேஷ் சிவன் 'போடா போடி' படத்தின் மூலமாக அறிமுகமானார். அந்த படத்தில் சிலம்பரசன், வரலட்சுமி சரத்குமார் ஆகியோர் நடித்திருந்தனர். 2012ம் ஆண்டு வெளியான போடா போடி தோல்வி அடைந்ததை அடுத்து மூன்று வருடங்கள் திரைப்படம் இயக்காமல் இருந்தார். அதனையடுத்துநானும்ரவுடிதான்படத்தைஇயக்கினார் விக்னேஷ் சிவன். தனுஷ் தயாரிப்பில் உருவான அப்படத்தில் நயன்தாரா நடித்தார். இதன் மூலம் அனைவரும் திரும்பிப்பார்க்கும் இயக்குநராக மாறினார் விக்னேஷ்.

விக்னேஷ் சிவனும் நடிகை நயன்தாராவும் 2022ல் காதலித்து திருமணம் செய்துக்கொண்டனர். இந்த தம்பதிக்கு உயிர் மற்றும் உலகம் ஆகிய 2 மகன்கள் உள்ளனர்.

நடிகை நயன்தாரா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்திலும் தனது எக்ஸ் பக்கத்திலும் தனது இல்லத்தில் விநாயகர் சதுர்த்தி கொண்டாடிய புகைப்படங்களைப் ஒரு வீடியோவாக தயார் செய்து பகிர்ந்துள்ளார்.

# துல்கர் சல்மான் மற்றும் ராணா இணைந்து நடிக்கும் `காந்தா'





மலையாள சினிமா முன்னணி நடிகர்களுள் ஒருவர் துல்கர் சல்மான். அவர் தற்பொழுது லக்கி பாஸ்கர் என்ற படத்தில் நடித்துள்ளார். இப்படம் வரும் அக்டோபர் 31ம் தேதி வெளியாகவுள்ளது.

அடுத்ததாக துல்கர் சல்மான் மற்றும் ராணா தகுபதி இருவரும் இணைந்து காந்தா என்ற படத்தில் நடிக்கவுள்ளனர். இப்படத்தை செல்வமணி செல்வராஜ் இயக்கவுள்ளார். படத்தின் பூஜை இன்று ஐதராபாத்தில் நடைப்பெற்றது. படத்தில் நடிக்கவிருக்கும் நடிகர்கள் மற்றும் படக்குழு கலந்துக் கொண்டனர்.

இப்படத்தில் மிஸ்டர் பச்சன் திரைப்பட புகழ் பாக்யஸ்ரீ , சுல்கர் சல்மானுக்கு ஜோடியாக நடிக்கவுள்ளார். இப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம் மற்றும் கன்னடம் மொழிகளில் வெளியாகவுள்ளது.

இப்படத்தை வேபாரர் பிலிம்ஸ் மற்றும் ராணா ஸ்பிரிட் மீடியா நிறுவனம் இணைந்து தயாரிக்கவுள்ளது. இப்படத்தின் இயக்குனர் 'தி ஹண்ட் பார் வீரப்பன்' மற்றும் நிலா திரைப்படங்களை இயக்கியுள்ளார்.

# ஹிட்லர் படத்தின் 'அடியாத்தி' பாடல் வெளியானது




இசையமைப்பாளரும் நடிகருமான விஜய் ஆண்டனி இறுதியாக நடித்த 'ரோமியோ', 'மழைப்பிடிக்காத மனிதம்' திரைப்படங்கள் கலவையான விமர்சனங்களைப் பெற்றது. தற்போது, 'படைவீரன்', 'வானம் கொட்டட்டும்' உள்ளிட்ட படங்களை இயக்கிய தனா இயக்கத்தில் 'ஹிட்லர்' என்கிற புதிய படத்தில் விஜய் ஆண்டனி நடித்துள்ளார்.

இதில் ரியா சுமன் நாயகியாக நடித்துள்ளார். நீண்ட இடைவெளிக்குப் பிறகு நடிகர் சரண்ராஜ் இப்படத்தில் ஒரு முக்கியமான பாத்திரத்தில் நடித்துள்ளார். படத்தின் படப்பிடிப்பு முழுமையாக முடிந்த நிலையில், தற்போது இறுதிக்கட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது.

செந்தூர்பிலிம் இன்டர்நேஷனல்தயாரிக்கும் இப்படத்தில்கவுதம் வாசுதேவ் மேனன் உள்ளிட்ட முன்னணி நடிகர்கள் நடித்துள்ளனர். இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் முன்னதாக வெளியானது. இந்த நிலையில், இப்படம் செப்டம்பர் 27ம் தேதி திரைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது..

படத்தின் முதல் பாடலான டப்பாஸ் சில வாரங்களுக்கு முன் வெளியானது. இப்படத்தில் ரியா சுமன் நாயகியாக நடித்துள்ளார். இப்படத்திற்கு விவேக் மெர்வின் இசையமைத்துள்ளனர்.

இந்த நிலையில், இப்படத்தின் `அடியாத்தி' என்ற பாடலை படக்குழு வெளியிட்டுள்ளனர்.

# மார்பக புற்றுநோய் நடுவே மற்றொரு நோயல் பாதிக்கப்பட்ட பிரபல நடிகை



நடிகை ஹினா கான் சமீபத்தில் தனக்கு மார்பக புற்று நோய் இருப்பது கண்டறியப்பட்டதாக சமூக வலைதளங்களில் பதிவிட்டு இருந்தார். இதையடுத்து சில நாட்களுக்கு முன் ஹினா கான் மார்பக புற்றுநோயால் இறந்துவிட்டதாக பொய்யான வீடியோ ஒன்று வைரலானது.

இந்நிலையில், நடிகை ஹினா கான் தனது மார்பக புற்று நோய் சிகிச்சைக்கு இடையே மியூகோசிடிஸ் இருப்பது கண்டறியப்பட்டதாக சமூக வலைத்தளத்தில் பதிவிட்டார். மேலும் அதற்கான தீர்வு அளிக்குமாறு ரசிகர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

அவர் தனது பதிவில், "கீமோதெரபியின் மற்றொரு பக்க விளைவு மியூகோசிடிஸ் ஆகும். இருப்பினும் அதற்கு சிகிச்சை அளிக்க மருத்துவர்களின் அறிவுரைகளை நான் பின்பற்றுகிறேன். உங்களில் யாராவது அதை அனுபவித்திருந்தால் அல்லது ஏதேனும் பயனுள்ள வைத்தியம் தெரிந்திருந்தால் தயவுசெய்து பரிந்துரைக்கவும். நீங்கள் சாப்பிட முடியாதபோது மிகவும் கடினமாக உள்ளது. இது எனக்கு பெரிதும் உதவும்" என கூறியுள்ளார்.

# மீண்டும் இணைந்து நடிக்கும் ரஜினி கமல்.. என்ன காரணம் தெரியுமா?




தென்னிந்திய நடிகர் சங்கத்தின் 68ஆவது பொதுக்குழு கூட்டம் தேனாம்பேட்டை காமராஜர் அரங்கத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றிய நடிகர் சங்கத்தின் பொருளாளர் கார்த்தி, நடிகர் சங்க கட்டடத்துக்கு நடிகர் விஜய் ஒரு கோடி ரூபாய் நிதி கொடுத்துள்ளதாக கூறினார்.

மேலும் விலைவாசி கடுமையாக உயர்ந்துள்ளதால், நடிகர் சங்க கட்டடத்தை கட்டுவதன் சுமை அதிகரித்துள்ளதாக கார்த்தி தெரிவித்தார். கடன் தர 50 சதவீத வைப்பு நிதி வைக்க வேண்டும் என வங்கி வலியுறுத்தியதாகவும், அதனை திரட்டுவதற்கு 4 மாதம் ஆனதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். சென்னையில் எந்த திருமண மண்டபத்திலும் இல்லாத அளவில் நடிகர் சங்க கட்டிடத்தில் 100 கார்கள் பார்க்கிங் செய்யும் வசதி உள்ளதாகவும் கார்த்தி தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர், நடிகர் சங்கத்தின் கடனை அடைக்க நடத்தப்படும் கலை நிகழ்ச்சியில் நடிகர்கள் ரஜினி, கமல் சேர்ந்து கலந்து கொள்வதாக உறுதியளித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கடைசி உலகப் போர் திரைப்படத்தின் டிரெய்லர் ரிலீஸ் தேதி அறிவிப்பு

ஹிப் ஹாப் ஆதி, சுந்தர் சி இயக்கத்தில் விஷால் நடிப்பில் வெளியான ஆம்பள திரைப்படத்தின் மூலம் இசையமைப்பாளராக தமிழ் சினிமாவில் அறிமுகமானார்.பின் தனி ஒருவன், ஆம்பள, வணக்கம் சென்னை, கதகளி, கவண், இமைக்கா நொடிகள், அரண்மனை போன்ற பல படங்களுக்கு இசையமைத்ததன் மூலம் ரசிகர்கள் மத்தியில் பிரபலமானார்.

கடந்த மே மாதம் வெளியான அரண்மனை 4 திரைப்படத்திற்கும் ஹிப் ஹாப் ஆதி இசையமைத்திருந்தார். அதேசமயம் நடிப்பதிலும் ஆர்வமுடைய இவர் மீசைய முறுக்கு என்ற திரைப்படத்தின் மூலம் கதாநாயகனாக உருவெடுத்தார். அதைத் தொடர்ந்து நட்பே துணை, வீரன் போன்ற படங்களிலும் நடித்தார். கடைசியாக ஹிப் ஹாப் ஆதி நடித்திருந்த பிடி சார் திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் வசூல் ரீதியாகவும் விமர்சன ரீதியாகவும் பெரும் வரவேற்பு பெற்று மிகப்பெரிய வெற்றி படமாக அமைந்தது.

ஹிப் ஹாப் ஆதி தற்போது 'கடைசி உலகப் போர்' எனும் புதிய படத்தில் நடித்து வருகிறார். படத்தில் நாசர், நட்டி, அனகா, அழகன் பெருமாள், ஹரிஷ் உத்தமன், முனிஷ்காந்த், சிங்கம்புலி, இளங்கோ குமரவேல், தலைவாசல் விஜய், மகாநதி சங்கர் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

போர் சம்பந்தமான கதைக்களத்தில் உருவாகி இருக்கும் இந்தப் படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் மற்றும் கிளிம்ஸ் வீடியோ வெளியாகி ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது.

இந்த படத்தை ஹிப் ஹாப் ஆதி, ஹிப் ஹாப் தமிழா என்டர்டெயின்மென்ட் நிறுவனத்தின் மூலம் தயாரித்து இயக்குவதோடு மட்டுமல்லாமல் படத்திற்கு இசையும் அமைத்துள்ளார். இந்த படத்தின் பாடல்கள் வெளியாகி வைரலானது.

இந்நிலையில் வருகின்ற செப்டம்பர் 11ம் தேதி கடைசி உலகப் போர் படத்தின் டிரெய்லர் வெளியாகும் என படகுழுவினர் புதிய போஸ்டர் ஒன்றை வெளியிட்டு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளனர். மேலும் அந்த போஸ்டரில் இப்படமானது வருகின்ற செப்டம்பர் 20ம் தேதி திரைக்கு வர இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வங்காளதேசத்துக்கு எதிரான டெஸ்ட் தொடர்: முதல் போட்டிக்கான இந்திய அணி அறிவிப்பு



வங்காளதேச கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட்மற்றும்3போட்டிகள்கொண்டடி20தொடர்களில் விளையாட உள்ளது. இதில் இவ்விரு அணிகளுக்கு இடையே முதலில் டெஸ்ட் தொடர் நடைபெற உள்ளது.

அதன்படி முதலாவது டெஸ்ட் போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் வரும் 19ம் தேதி தொடங்க உள்ளது.

இந்நிலையில் இந்த டெஸ்ட் தொடரில் முதல் போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. ரோகித் சர்மா தலைமையிலான அந்த அணியில் ரிஷப் பண்ட் மீண்டும் இடம்பிடித்துள்ளார்.

இந்திய அணி விவரம் பின்வருமாறு: ரோகித் சர்மா (கேப்டன்), ஜெய்ஸ்வால், சுப்மன் கில், விராட் கோலி, ரிஷப் பண்ட், துருவ் ஜூரல், கேஎல் ராகுல், சர்பராஸ் கான், அஸ்வின், ஜடேஜா, அக்சர் படேல், குல்தீப் யாதவ், முகமது சிராஜ், ஆகாஷ் தீப், பும்ரா மற்றும் யாஷ் தயாள்.

# வங்காளதேசத்துக்கு எதிரான டெஸ்ட் தொடர்: இந்திய அணி அறிவிப்பு எப்போது..? வெளியான தகவல்



வங்காளதேச கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் மற்றும் 3 போட்டிகள் கொண்ட டி20 தொடர்களில் விளையாட உள்ளது. இதில் இவ்விரு அணிகளுக்கு இடையே முதலில் டெஸ்ட் தொடர் நடைபெற உள்ளது. அதன்படி முதலாவது டெஸ்ட் போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் வரும் 19ம் தேதி தொடங்க உள்ளது.இதற்கானஇந்தியஅணிஇன்னும்அறிவிக்கப்படவில்லை.

இந்நிலையில் இந்த டெஸ்ட் தொடருக்கான இந்திய அணி நாளை அறிவிக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அஜித் அகர்கர் தலைமையிலான தேர்வுக்குழுவினரால் தேர்வு செய்யப்படும் இந்திய அணியில் துலீப் டிராபியில் அசத்திய இளம் வீரர்கள் இடம்பெற வாய்ப்புள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

# டெஸ்ட் கிரிக்கெட்: குமார் சங்கக்கராவின் வாழ்நாள் சாதனையை தகர்த்த ஜோ ரூட்



இங்கிலாந்து இலங்கை இடையிலான 3வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் முதல் இன்னிங்சில் முறையே இங்கிலாந்து 325 ரன்களும், இலங்கை 263 ரன்களும் அடித்தன.

இதனையடுத்து 62 ரன்கள் முன்னிலையுடன் 2வது இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணியின் பேட்ஸ்மேன்கள் இலங்கை பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் திணறி வருகின்றனர். தற்போது வரை இங்கிலாந்து அணி 7 விக்கெட்டுகளை இழந்து 84 ரன்கள் மட்டுமே அடித்துள்ளது. பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட நம்பிக்கைநட்சத்திரம்ஜோரூட்12ரன்களில்ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார். முன்னதாக ஜோ ரூட் இந்த ஆட்டத்தில் அடித்த 12 ரன்கள் சேர்த்து டெஸ்ட் கிரிக்கெட்டில் 12402 ரன்கள் குவித்துள்ளார். இதன் மூலம் சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அதிக ரன்கள் குவித்த வீரர்களின் மாபெரும் சாதனை பட்டியலில் 6வது இடத்தில் இருந்த குமார் சங்கக்கராவின் (12400 ரன்கள்) வாழ்நாள்சாதனையைதகர்த்தஅவர்6வது இடத்தைபிடித்து அசத்தியுள்ளார். அந்தபட்டியல்: 1.சச்சின்டெண்டுல்கர் 15921 ரன்கள், 2.ரிக்கி பாண்டிங் 13378 ரன்கள், 3.ஜாக் காலிஸ் 13289 ரன்கள், 4.ராகுல் டிராவிட் 13288 ரன்கள், 5. அலஸ்டர் குக் 12472 ரன்கள், 6. ஜோ ரூட் 12402 ரன்கள், 7. குமார் சங்கக்கரா 12400 ரன்கள்

# நீங்கள் கவலைப்பட தேவையில்லை அஸ்வின் கருத்துக்கு பாகிஸ்தான் முன்னாள் வீரர் பதிலடி



பாகிஸ்தான் நாட்டிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட வங்காளதேச கிரிக்கெட்அணி2போட்டிகள்கொண்டடெஸ்ட்தொடரில்விளையாடியது. அந்த 2 போட்டிகளிலும் வெற்றி பெற்ற வங்காளதேசம், பாகிஸ்தானை அதன் சொந்த மண்ணில் ஒயிட்வாஷ் செய்து வரலாறு படைத்தது.

ஏற்கனவே கடந்த சில ஆண்டுகளாக பாகிஸ்தான் அணி மோசமான செயல்பாடுகளை வெளிப்படுத்தி வரும் வேளையில் தற்போது வங்காளதேச அணிக்கு எதிராகவும் சொந்த மண்ணில் தோல்வியை தழுவியது அந்நாட்டு ரசிகர்கள் மத்தியில் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

இதனால் பாகிஸ்தான் அணியின் சமீபத்திய செயல்பாடுகள் கவலை அளிக்கும் விதமாக உள்ளதாக இந்திய வீரர் அஸ்வின் கூறியிருந்தார்.

இந்நிலையில் அஸ்வினின் இந்த கருத்துக்கு பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரரான அகமது சேஷாத் பதிலடி கொடுத்துள்ளார்.

அதில்,"பாகிஸ்தான்கிரிக்கெட்டைநினைத்துஏன்ஆச்சரியமடைகிறீர்கள் அஸ்வின்? நீங்கள் கவலைப்பட தேவையில்லை. ஏனென்றால் பாகிஸ்தானில்எல்லாம்சரியாகவேஉள்ளது.பாகிஸ்தானில்கட்டப்பட்டுவரும்மைதானங்களைபார்க்கவில்லையா? தொடர்ச்சியாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேபோல் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் ஒருங்கிணைத்துள்ள உள்நாட்டு கிரிக்கெட் தொடரான சாம்பியன்ஸ் ஒருநாள் கோப்பையை பார்க்கவில்லையா? அந்த தொடர் முடிவடைந்த பின் எத்தனை திறமையான வீரர்கள் வருவார்கள் என்று எண்ணிப் பார்க்க தயாராகுங்கள்.

எப்படி வேகப்பந்து வீச்சாளர்களை உருவாக்குகிறோம் என்பதை கற்றுக் கொள்ள தயாராக இருங்கள். இதனையெல்லாம் பார்க்கலாம் ஏன் ஆச்சரியம் கொள்கிறீர்கள். டி20 உலகக்கோப்பை தொடரின் சூப்பர் 8 சுற்றுக்கு கூட தகுதிபெறவில்லை என்றால் என்ன? பாகிஸ்தான் அணிக்குள் ஒற்றுமை இல்லாமல் குரூப் சேர்ந்து கொண்டு அரசியல் செய்தால் என்ன? பாகிஸ்தான் அணியில் உள்ள வீரர்கள் மோசமான விளையாடினால் என்ன? இதெல்லாம் ஒரு பிரச்சனையா ரவிச்சந்திரன் அஸ்வின். இதற்கெல்லாம் கவலைப்பட தேவையில்லை" என்று பதிலடி கொடுத்துள்ளார்.

# கிரிக்கெட் வரலாற்றிலேயே அவரைப் போன்ற வீரரை பார்ப்பது அரிதான விஷயம் சயீத் அஜ்மல் பாராட்டு




பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர் சயீத் அஜ்மல். இவர் விளையாடிய கால கட்டங்களில் பாகிஸ்தான் அணியின் பல வெற்றிகளில் முக்கிய பங்காற்றியுள்ளார்.

பாகிஸ்தான் அணியின் தரமான சுழற்பந்து வீச்சாளராக இருந்த அவரது பவுலிங் ஆக்சன் மீது சில சர்ச்சைகள் இருந்ததால் அவர் பாகிஸ்தான அணியில் இருந்து மெல்ல மெல்ல ஓரம் கட்டப்பட்டார்.

இந்நிலையில் தான் விளையாடியதிலேயேநல்லகிரிக்கெட்டர் என்றால் அது சச்சின்தான் என்று அவர் பாராட்டியுள்ளார்.

இது குறித்து பேசிய அவர் கூறுகையில், "கிரிக்கெட் வரலாற்றிலேயே சச்சின் டெண்டுல்கரை போன்ற ஜாம்பவான் வீரரை பார்ப்பது அரிதான விஷயம். உலகிலேயே நல்ல குணம் கொண்ட ஒரு மனிதரும் அவர்தான். எனவேதான் நான் அவரை எப்போதும் சார் என்று அழைப்பேன். அவர் அந்த வார்த்தைக்கு தகுதியான ஒரு வீரர் அவர்தான் என்பதையும் நான் நம்புகிறேன்.

கடந்த 2011 ஆம் ஆண்டு உலகக்கோப்பை அரையிறுதி போட்டியில் அவரது விக்கெட்டை வீழ்த்தியதை நான் மறக்கவே மாட்டேன். அந்த நினைவுகளை பசுமையாக இன்றும் வைத்திருக்கிறேன். அதேபோன்று நான் அவருடன் சேர்ந்து ஒரு போட்டியில் விளையாடியிருக்கிறேன். அப்போது அவர் எனக்கு கேப்டனாக இருந்து என்னை ஆதரித்து சிறப்பாக செயல்பட வைத்தார்" என்று கூறினார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.